**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.266/2023

வா.சா.1 கண்ணன் த/பெ அங்கப்பன்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. பெரியசேமூர் என்ற பஞ்சாயத்துக்குட்பட்ட சூலைபகுதியில் பொன்னிநகரியில் உள்ள சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். என்னுடைய வீட்டிற்க்கு நியுஹவுஸ் என்ற பெயர் உள்ளது என்றால் எனது வீடு கட்டி 15 வருடங்கள் ஆகிறது. நான் கார்புரோக்கராக தொழில் செய்து வருகிறேன். நான் செய்து வரும் தொழிலுக்கு விலாசம் கிடையாது. சொந்த வீடு தவிர வேற வீடுகள் வாடகைக்கு விடப்பட்டதா என்றால் இல்லை.

2. தாவா சொத்து எத்தனை சதுர அடி என்றால் 732 சதுர அடிகள் ஆகும். தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் பவானி மெயின் ரோட்டில் இருந்து 1/4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செங்கோட்டையன்நகர், வைராபாளையம் அமைந்துள்ளது. செங்கோட்டையன் நகர் தாண்டி வயல்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3. 2ம் பிரதிவாதி பாபு என்னுடைய நண்பர் ஆவார். 20 வருடங்களாக அவர் எனக்கு பழக்கம் ஆவார். எப்படி அவர் எனக்கு பழக்கம் என்றால் வா.உ.சி பார்க் நடைபயிற்ச்சிக்கு வருவார் அப்போது எனக்கு பழக்கம் ஆனார். 2ம் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பது வாடிக்கையாக இருந்ததா என்றால் இல்லை. அவரது குடும்பத்தார்கள் எவ்வளவு நாள் பழக்கம் என்றால் கடந்த 20 வருடங்களாக பழக்கம். பிரதிவாதிகள் ஏன் வீட்டை விற்க முன்வந்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு உடல் நிலை குறைவு காரணமாக மருத்துவ செலவுக்காக பணம் தேவை என்பதால் வீட்டை விற்க முன்வந்தார்.

4. 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு சென்னையில் மருத்துவம் பார்க்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு என்ன உடல்நிலை குறைபாடு என்றால் இடுப்பில் உடல் நிலை குறைபாடு என்று கூறினார். அதனால் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார் என்றால் இல்லை. நாட்டு வைத்தியம் தான் பார்த்துவந்தார். அதன்பிறகு நாட்டு வைத்தியம் கேட்கவில்லை என்பதால் ஆங்கிலமருத்துவத்தை பார்க்கவேண்டும் என்று கூறினார்.

5.எப்போது எந்த வருடம் 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு உடல் நிலை குறைவு ஏற்பட்டதுஎன்றால் 2014 ஆகும். இந்த சொத்து சம்மந்தமாக பிரதிவாதியுடன் வேறு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் வேறு பத்திரங்கள் எதுவும் எழுதவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.